# <u>இராமநாதபுரம் நகராட்சி</u>

இராமநாதபுரம் நகராட்சியில் 2019 நவம்பர் மாதத்திற்கான நகர் மன்ற சாதாரண கூட்டம் 29.11.2019-ந் தேதி காலை 11.17 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**<u>பொருள் 1</u>**

இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் நவம்பர் 2019–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.1042</u>–** பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் 2</u>**

இராமநாதபுரம் நகராட்சி பொறியாளர் நவம்பர் 2019–க்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>** மன்றம் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.1043</u>–** பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் 3</u>**

இராமநாதபுரம் நகராட்சி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019–2020ன் கீழ், வார்டு எண்–20, சின்னக்கடை வீதி, பாம்பூரணித் தெருவில் LED மின்விளக்குகள் அமைக்கும் பணிக்கு 06.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்ததாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு (ரூ) | வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | M/s.Ambal Electriclas,<br>No.2-826-1, Ist Floor.<br>Maruthupandiyar Street,<br>Thasildar Nagar.Madurai-625 020 | 5,00,000/– | 1.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s.Siva Job works,<br>5/558. Sathiyagopal street,<br>Sathasiva Nagar,<br>Madurai-625 020 | 5,00,000/– | 4.64% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் M/s.Ambal Electriclas, Madurai அவர்களது 1.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு– 1.</u>**மன்றம் அனுமதிக்கலாம்.

2.இப்பணி திட்டப்பணியாதலால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களது முன் ஒப்புதல் பெற்று விநியோகம் செய்யம் பணிக்கு வேலை உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்: 2627/2019/இ1

**<u>தீர்மானம் எண்.1044</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 4</u>**

இராமநாதபுரம் நகராட்சி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019–2020ன் கீழ் வார்டு எண்–8, காட்டு பிள்ளையார் கோவில் தெருவில் LED மின்விளக்குகள் அமைக்கும் பணிக்கு 06.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்ததாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு (ரூ) | வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | M/s.Ambal Electriclas,<br>No.2-826-1, Ist Floor.<br>Maruthupandiyar Street,<br>Thasildar Nagar. Madurai-625 020 | 5,00,000/– | 1.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s.Siva Job works,<br>5/558. Sathiyagopal street,<br>Sathasiva Nagar, Madurai-625 020 | 5,00,000/– | 4.64% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் M/s.Ambal Electriclas, Madurai அவர்களது 1.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு– 1.</u>**மன்றம் அனுமதிக்கலாம்.

2.இப்பணி திட்டப்பணியாதலால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களது முன் ஒப்புதல் பெற்று விநியோகம் செய்யம் பணிக்கு வேலை உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்: 2627/2019/இ1

**<u>தீர்மானம் எண்.1045</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 5</u>**

இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விடுபட்ட வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர நகர் அபிவிருத்தி திட்டம் சுழற்சி நிதியின் கீழ் (UIDSSMT-Revolving Fund) ரூ.121.00 இலட்சம் மதிப்பீட்டில் 3500 வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.13277/2018/WS1 நாள்.19.06.2018–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டிற்கு தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.13277/2018/DO2 நாள்.23.01.2019–ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள 04.11.2019 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி துவங்கும் நிலையில் உள்ளது. இந்நிலையில் இராமநாதபுரம் நகராட்சியில் குடிநீர் விநியோக உபவிதிகள் 2009–ன்படி கீழ்க்காணும் விபரப்படி கட்டணம் நிர்ணயம் செய்து கொள்ள தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வகை | குடியிருப்பு (ரூபாயில்) | வணிகம் மற்றும் தொழிற்சாலை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | டெபாசிட் தொகை | 5,000/– | 15,000/– |
| 2 | **சாலை சீரமைப்பு கட்டணம்** | | |
| | அ) தார்சாலை | 7,902/– | 7,902/– |
| | ஆ) சிமெண்ட் சாலை | 8,816/– | 8,816/– |
| 3 | **இணைப்பு பொருட்கள் மற்றும் பணியாளர் செலவு** | | |
| | அ) தார்சாலை | 3,153– | 3,153– |
| | ஆ) சிமெண்ட் சாலை | 3,235/– | 3,235/– |
| 4 | மேற்பார்வை கட்டணம் | 1,000/– | 1,000/– |
| 5 | விண்ணப்பக் கட்டணம் | 100/– | 100/– |
| 6 | விண்ணப்ப பதிவு கட்டணம் | 500/– | 500/– |

வரிசை எண்.4–ல் காணும் மேற்பார்வைக் கட்டணம் குடிநீர் விநியோக உபவிதி எண்.(1)(a) குடிநீர் இணைப்பிற்காக தயாரிக்கப்படும் மொத்த மதிப்பீட்டு கட்டணத்தில் 15 சதவிகிதம் செண்டேஜ் மற்றும் ஆய்வுக் கட்டணமாக வசூலிக்கப்படும். குறைந்தளவு ஆய்வுக்கட்டணம் ரூ.1,000/– வசூலிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, குறைந்தளவு ஆய்வுக்கட்டணம் ரூ.1,000/– வசூல் செய்து கொள்ளவும், மேலும், வரிசை எண்.6–ல் விண்ணப்ப பதிவு கட்டணம் ரூ.500/– வசூல் செய்து கொள்ளவும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் கட்டணங்கள் நிர்ணயம் செய்திடவும், மேற்படி கட்டணத் தொகையினை 10 சம கால தவணைத் தொகைகளில் வீட்டு வரியுடன் சேர்த்து கீழ்க்காணும்

விபரப்படியாக நிர்ணயம் செய்து வசூல் செய்திடவும் தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| 10 தவணைகளுக்கான மொத்த தொகை | | | |
|---|---|---|---|
| குடியிருப்பு | | வணிகம் | |
| தார்சாலை | சிமெண்ட் சாலை | தார்சாலை | சிமெண்ட் சாலை |
| ரூ.17,655/– | ரூ.18,651/– | ரூ.27,655/– | ரூ.28,651/– |

| ஒரு தவணைக்கான திருப்பி செலுத்த வேண்டிய தொகை | | | |
|---|---|---|---|
| குடியிருப்பு | | வணிகம் | |
| தார்சாலை | சிமெண்ட் சாலை | தார்சாலை | சிமெண்ட் சாலை |
| ரூ.1,770/– | ரூ.1,870/– | ரூ.2,770/– | ரூ.2,870/– |

<u>அலுவலகக் குறிப்பு</u>:

1. மேற்கண்ட தொகை நிர்ணயம் செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட குடிநீர் திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மேற்காணும் கட்டண விகிதத்தில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதற்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1677/2018/இ1)

**<u>தீர்மானம் எண்.1046</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் 6</u>

1. Resolved that Ramanathapuram Municipality is the authorized signatory to borrow the interest free loan of **RS 1.21 Crore ( Rupees One Crore and twenty One Lakhs only)** from TUFIDCO for **' Provinding Internal Plumping Works for Water Supply HSC ( Minimum 3500 Nos)** for making optimum utilization of Water Supply at **Ramnathapuram Municipality'** under Revolving fund of **UIDSSMT** as per the terms and conditions prescribed by TUFIDCO.

   .

2. The authorized signatory be and hereby authorized to execute the loan agreement and other documents if any with TUFIDCO complete all the other formalities including affixing of the common seal of **Ramanathapuram**

**Municipality** on the documents to be executed with TUFIDCO on behalf of RamanathapuramMunicpality .

3. Resolvedto repay the interest free loan as per the repayment schedule in the agreement.

4. Resolved to adhere to time line as envisaged DPR.

5. Resolved that **Ramanathapuram Municipality** is authorizing the authorized signatory to make necessary budgetary provisions in **Ramanathapuram Municipality** 's annual budget for the repayment of principal for the project proposals to TUFIDCO and is hereby confirmed that all dues will be paid in time without creating sustainable revolving fund.

6. Resolved that **Ramanathapuram Municipality** is authorizing the authorized signatory to open and operate an ESCROW account for Water Supply in favour of TUFIDCO till the repayment of loan.

Roc.No.1677/2018/E1

**<u>தீர்மானம் எண்.1047</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 7</u>**

இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் விநியோகம், மற்றும் பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில் குடிநீர் விநியோகம் வால்வு திறத்தல், குடிநீர் விநியோகத்தில் அவ்வபோதிய ஏற்படும் பழுதுகளை சரி செய்தல், பாதாள சாக்கடை திட்டபணிகளில் மின் மோட்டார் இயக்குதல் மற்றும் பாதாள சாக்கடை அடைப்புகள் நீக்கும் வாகனத்திற்கான பணியாளர்கள் போதிய அளவில் இல்லாததால் குடிநீர் விநியோகம் மற்றும் பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில் சிரமங்கள் ஏற்படுகின்றது.குடிநீர் விநியோகம் மற்றும் பாதாள சாக்கடை திட்டத்தில் புகார்கள் வராத வண்ணம் செயல்படுத்தும் பொருட்டு போதிய பணியாளர்களை கொண்டு இயக்குதலும் பராமரிப்பு பணிகளை செய்ய வேண்டி இருப்பதால் தற்காலிக தினக்கூலி அடிப்படையில் 31.03.2020 வரை சுமார் 20 நபர்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தி கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.12.30/– லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>– 1)**மன்றம் அனுமதிக்கலாம்.

2)இப்பணி குடிநீர் விநியோகம் மற்றும் பாதாள சாக்கடை பணி என்பதினால் அவசர அவசியம் முன்னிட்டு நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.3510/2019/இ1

**<u>தீர்மானம் எண்.1048</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 8</u>**

இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் நிதி 2018–2019–ன் கீழ் Providing Internal Plumping Works for Water Supply HSC–3500 எண்ணம் இணைப்பு வழங்கும் பணிக்கு ஐந்தாம் மற்றும் ஆறாம் அழைப்பு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் CSR 2019–20ன் கீழ் நகராட்சி எம்.எஸ்.கே.தொடக்கப்பள்ளியில் சுகாதார வளாகம், அலுவலர்கள் அறை மற்றும் வள்ளல் பாரி நடுநிலைப்பள்ளி கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பும், மற்றும் வளர்ச்சி திட்டம் மற்றும் சாதனைகள் குறித்து தொழில் மலர் –2019ல் விளம்பரம் வெளியிட்டதற்கும் விளம்பரதாரர்களுக்குரிய பட்டியல் தொகை கீழ்க்கண்டவாறாக வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

| விளம்பரதாரர்கள் பெயர்கள் | நம்பர் பில் மற்றும் நாள் | பட்டியல் தொகை ரூ. |
|---|---|---|
| 1) Deccan Chronicle, TamilNadu | AAA/0265/19–20/ 16.09.2019 | 33,264/– |
| 2) Malai Murasu, Tamil Nadu | AAA/0265/19-20/ 16.09.2019<br>CGST 2.50%<br>SGST 2.50% | 19,200/–<br>1,311.60<br>1,311.60 |
| | Total | 55,087 |
| 3) Deccan Chronicle, TamilNadu | AAA/0292/19-20/03.10.2019<br>CGST 2.50%<br>SGST 2.50% | 33,264/– |
| 4) Malai Murasu,Tamilnadu | AAA/0292/19-20/03.10.2019<br>CGST 2.50%<br>SGST 2.50% | 16.800/–<br>1,251.60/–<br>1,251.60/– |
| | Total | 52,567/– |

| | | |
|---|---|---|
| 5) தினதந்தி நாளிதழ், மதுரை | Mdu/19-20/0015962<br>நாள்.29.09.2019 | 9,979/– |
| 6) தினபூமி, நாளிதழ், மதுரை | 81259/07.11.2019 | 21,000/– |

**<u>அலுவலக குறிப்பு–</u>** 1)மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட வரிசை எண்–1 முதல் 4 வரையிலான உள்ள விளம்பர கட்டணத்தினை M/s.Accord Advertisement , Agencies, Chennai அவர்களுக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3877/2014/இ1

**<u>தீர்மானம் எண்.1049</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 9</u>**

இராமநாதபுரம் நகராட்சி, வார்டு எண்–14ல் நாகநாதபுரம் பகுதியில் உள்ள கான்சாகிப் தெரு என்று பெயர் மாற்றம் செய்ய கோரி பொது நல வழக்கு எண் W.P(MD)No.19312/2019ன் படி திரு.ஏ.எஸ்.அன்வர்தீன் என்பவர் தாக்கல் செய்யப்பட்டுள்ளார். மேற்படி பொது நல வழக்கில் நகராட்சியின் தெரு பெயர் மாற்றம் செய்ய கோரி வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்று காரணம் கூறி பொது நல வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு வழக்குரைஞர் கட்டணம் ரூ.15,000/–ஐ நகராட்சி வழக்கறிஞர் திரு.ஏ.கண்ணன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>** 1)மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று பட்டியல் தொகை வழங் குவதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.3606/2017/இ1

**<u>தீர்மானம் எண்.1050</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 10</u>**

இராமநாதபுரம் நகராட்சி, பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பில் கழிவுநீர் உந்து குழாய்களும், ஆய்வு குழிகளும் பராமரிக்கப்படுகிறது. தற்பொழுது மதுரை – மண்டபம் சாலை, நகர் பகுதியில் அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலை அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது. அப்பகுதியில் உள்ள பாதாள சாக்கடை ஆய்வுக் குழிகள் அனைத்தும் தாழ்வாகவும், சில ஆய்வுக் குழிகள் பழுதடைந்தும் உள்ளது. எனவே மதுரை–மண்டபம் சாலை பயோனியர் மருத்துவமனையில் இருந்து குமரையா கோவில் வரை உள்ள மனித ஆய்வுக் குழிகளை உடனே

உயர்த்தி கட்ட வேண்டியுள்ளது. நெடுஞ்சாலை துறையினரால் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள இயலாத நிலையில், நகராட்சியால் செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.50/– லட்சத்திற்கு பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் செலவினம் மேற்கொள்ள நகர் மன்ற நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3705/2019/இ1)

**<u>தீர்மானம் எண்.1051</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 11</u>**

இராமநாதபுரம் நகராட்சி, தெருவிளக்கு பராமரிப்பு பணிக்காக இந்நகராட்சி பணியாளர்கள் கொண்டு தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கான மின்சாதன பொருட்கள் வாங்கி பயன்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00/– லட்சத்திற்கு பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள நகர் மன்ற நிர்வாக அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலக குறிப்பு– 1</u>)**மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**இப்பணி தெருவிளக்கு பராமரிப்பு பணி என்பதால் அவரச அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களது முன் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 3577 /2019/இ1

**<u>தீர்மானம் எண்.1052</u>–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 12</u>**

இராமநாதபுரம் மாவட்ட தலைநகரமான இராமநாதபுரம் நகராட்சியில் உள்ள முதன்மைச்சாலை ஒன்றிக்கு தமிழ்ச்சாலை எனப்பெயர் சூட்டும் பொருட்டு மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு கூட்டத்தில் எடுக்கப்பட்ட கொள்கை முடிவின்படி மாவட்ட ஆட்சியர் இராமநாதபுரம் அவர்களின் கடிதம் ந.க.எண்.99/2019 நாள்.07.11.2019–ல் கோரியுள்ளபடி இந்நகராட்சி ஆவணங்களில் உள்ள தெருக்கள் பட்டியலின்படி முதன்மை சாலையான தேவிப்பட்டிணம் சாலை (வழிவிடும் முருகன் கோவில் சிக்னல் முதல் கேணிக்கரை சந்திப்பு வரை) உள்ள சாலையினை “ தமிழ்ச்சாலை” என

பெயர் மாற்றம் செய்ய உரிய கருத்துரு மாவட்ட ஆட்சியர் இராமநாதபுரம் அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு– 1)**அரசாணை நிலை எண்.573, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.14.12.2001ன்படி தெருக்களின் பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றுவது போன்றவை தவிர்க்க அறிவுறுத்தப்படுகிறது.

2)மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அரசின் கொள்கை முடிவாக உள்ளதால் அரசின் உத்திரவு பெற்று பெயர் மாற்றம் செய்ய அனுமதிக்கலாம்.

ந.க.எண். /2019/எப்1

**தீர்மானம் எண்.1053**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 13**

இராமநாதபுரம் நகராட்சி, பொது சுகாதாரப் பிரிவின் கீழ் இயங்கும் குப்பை அகற்றும் லாரி (Compactor) வாகனத்திற்கு டயர்கள் புதியதாக வழங்குவதற்கு 28.10.2019 அன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது,மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ முருகன் டயர்ஸ்,<br>6/1, 6/2, மண்டபம் ரோடு,குமரையா கோவில் ஸ்டாப்,<br>இராமநாதபுரம். | ரூ.80,800/– |
| 2 | பிரிமியர் கார் ஸ்பேர்ஸ்,<br>35, R.F.ரோடு,<br>இராமநாதபுரம். | ரூ.82,000/– |

மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கண்ட ‘‘ஸ்ரீ முருகன் டயர்ஸ், 6/1, 6/2, மண்டபம் ரோடு குமரையா கோவில் ஸ்டாப், இராமநாதபுரம் அவர்கள் கொடுததுள்ள விலைப்புள்ளி குறைவாக இருப்பதால், இவ்விலைப்புள்ளியை ஏற்று, வழங்கல் உத்திரவு வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1054**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 14**

இராமநாதபுரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வந்த (Tri Cycle)–மூன்று சக்கர தள்ளுவண்டிகள் சுமார் 25 வண்டிகள் பழுதடைந்து இயக்க முடியாத

நிலையில் உள்ளது. இதனால் பொது சுகாதார பணிகள் பாதிக்கப்படுவதால், மேற்கண்ட தள்ளுவண்டிகளை பழுது நீக்கம் செய்வதற்கு விலைப்புள்ளி கோரவும், உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் வேண்டப்படுகின்றது.

**<u>அலுவலக குறிப்பு–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3635/2019/எச்1)

**<u>தீர்மானம் எண்.1055</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 15</u>**

இராமநாதபுரம் நகராட்சி வார்டு –E, பிளாக்–9 நகரளவு எண் 70 பள்ளிவாசல் ஊரணி தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.WP.No.6398/2006–ல் நாள்.28.06.2018–ல் அரசுக்கு சாதகமாக ஏற்பட்ட தீர்ப்பின்பேரில் மேற்படி மனுதாரர் மேல்முறையீடு செய்து தடை உத்திரவு பெறாமல் இருக்க சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.சீனிவாஸ் அவர்கள் மூலம் கேவியட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பெரிய முகல்லா முஸ்லீம் ஜமாத் நிர்வாக மன்றம் சார்பில் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு வழக்கு எண்.W.A.No/3531/2019 வழக்கிற்கு நகராட்சி சார்பில் வழக்கிற்கு வக்கலாத்து தாக்கல் செய்யவும் மற்றும் வழக்கினை நடத்திட ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்ற பொருள் வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2054/2004/எப்1)

**<u>தீர்மானம் எண்.1056</u>**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 16</u>**

இராமநாதபுரம் நகராட்சி, அலுவலக ஈப்பு வாகனம் TN65-AF-4353 வாகனத்தில் உள்ள டயர்கள் 4–எண்ணம் தேய்மானம் ஆகியுள்ளதால் மேற்படி வாகனத்திற்கு புதிய 4–எண்ணம் டயர்கள் வாங்கி பொருத்தும் பணிமேற்கொள்ளுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.26,000/–த்திற்கு குடிநீர் நிதியின் மூலம் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>** 1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)அலுவலக வாகனப் பணி என்பதால் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று விலைப்புள்ளி கோருவதற்கும், மேலும் வரப்பெற்ற

விலைப்புள்ளியில் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்குவதற்கும், பட்டியல் தொகை வழங்குவதற்கும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

(ந.க.எண்.3663/2019/இ1)

**தீர்மானம் எண்.1057**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 17**

இராமநாதபுரம் நகராட்சி, குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்டம் 2019–2020, குடிநீர் விநியோகம் மற்றும் பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிக்கு தினக்கூலி அடிப்படையில் 20 பணியாளர்கள் அமர்த்தும் பணிக்கு 27.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு (ரூ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) | வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | M/s.Evergreen Environment Services,<br>No.15, Lakhsmi Complex,<br>Railway Feeder Road,<br>Ramanathapuram-623 501 | 12,30,000/– | 12,20,621/– | **0.23%** சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s.Exsernet,<br>No-8, M.M.Complex,<br>Kalpalam Road,<br>Madurai-625 002 | 12,30,000/– | 12,34,982/– | **0.93%** சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிதாரர்களில் குறைந்த விலை விகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர் M/s.Evergreen Environment Services,No.15, Lakhsmi Complex, Railway Feeder Road, Ramanathapuram-623 501அவர்களது 0.23% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:3510/2019/இ1

**தீர்மானம் எண்.1058**– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 18**

இராமநாதபுரம் நகராட்சிப் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியின் ஒரு பணியான முதிர் கொசுக்களை ஒழிக்கும் பணியான புகை மருந்து தெளிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணிக்கு தேவையான *பைரீத்திரம்* மருந்து கடந்த ஆண்டு 100

லிட்டர் 17.05.2019ம் தேதியில் வாங்கப்பட்டு இது நாள் வர பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மேற்காணும் மருந்து அலுவலக இருப்பில் இல்லாமல் உள்ளது. மேலும் தற்பொழுது மழைக்காலமாக உள்ளதால் கொசு உற்பத்தி அதிகமாக வரை வாய்ப்புள்ளதால் அதனை கட்டுப்படுத்தும் பொருட்டு புகைமருந்து தெளிக்கும் பணி தினசரி காலை மாலை 2 வேளையும் நடைபெற உள்ளதால் பைரீத்திரம்* மருந்து (பைரீத்திரம் 2 % Extract) 200 லிட்டர் அரசு அங்கீகாரம் செய்துள்ள நிறுவனத்திடமிருந்து வாங்கி வழங்க உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

<u>**அலுவலக குறிப்பு–**</u> பொது சுகாதார அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3693/2019/எச்1)

<u>**தீர்மானம் எண்.1059**</u>– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>**பொருள் 19**</u>

இராமநாதபுரம் நகராட்சி, வருவாய் நிதி 2019–20, தெருவிளக்கு பராமரிப்பு பணிக்காக மின் உபகரணங்கள் விநியோகம் செய்யும் பணிக்கு 28.11..2019–ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் வரப்பெற்றன.

| வ.எண் | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | மதிப்பீடு (ரூ) | வழங்கியுள்ள விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|
| 1 | M/s.DARANI ASSOCIATE,<br>No.31, Thilak Nagar,<br>Iyyar Bunglow,<br>Madurai-625 014. | 5,00,000/– | 0.10% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s.Mahalakshmi Enterprises,<br>No.8,I-st Floor,<br>Evening Bazaar,<br>Chennai-600 003 | 5,00,000/– | 1.06 % சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்ட வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களில் குறைந்த விலைவிகிதம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.DARANI ASSOCIATE, No.31, Thilak Nagar, Iyyar Bunglow, Madurai-625 014, அவர்களது 0.10% சதவிகிதம் மதிப்பிட்டை விட குறைவினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>– மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 3577/2019/இ1

<u>**தீர்மானம் எண்.1060**</u>– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 20</u>**

இராமநாதபுரம் நகராட்சி, DAY-NULM 2017–2018''ன் கீழ், இராமநாதபுரம் மாவட்டம் அரசு தலைமை மருத்துவமனையில் நோயாளிகளுடன் உடன் வருபவர்களுக்கான தங்குமிடம் கட்டும் பணிக்கு (Construction of Special Shelter of Attenders) ரூ.45.00 லட்சத்திற்கு கட்டப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி உள்ள பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் எண்.38038/2013/UPA2, நாள்.06.11.2019–ன் படி பயன்பாட்டிற்கு ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட நகர்ப்புற வீடற்றோர் தங்கும் விடுதி (Special Shelter of Attenders) நோயாளிகளுடன் உடன் வருபவர்களக்கான தங்கும் இல்லம்) செயல்படுத்தி பராமரிக்க விருப்பம் தெரிவித்து ''M/s.ரோஜாவனம் டிரஸ்ட், எண்.41, வெள்ளாளர் காலனி மேற்கு, நாகர்கோவில்'' அவர்கள் நடத்தி கொள்ள கொடுத்துள்ள 28.11.2019–ம் தேதிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–1)** மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.38038/2013/UPA2, நாள்.27.03.2017–ல் கண்டுள்ளபடி நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகளின்படி மையத்தை நடத்துவதற்கு உரிய (MOA) பெற்றுக் கொண்டு ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:1592/2019/இ1

**<u>தீர்மானம் எண்.1061</u>**– அலுவலகக் குறிப்புகள் அனுமதிக்கப்பட்டன.

**<u>பொருள் 21</u>**

இராமநாதபுரம் நகராட்சி, Turip 2019–20ன் கீழ், சிப்பம்–1–க்கான ''வனசங்கரி அம்மன் அக்ரஹாரம் ரோடு, கொத்தனார் நடுத் தெரு, முகவை ஊரணி மேற்கு கரை மற்றும் கோழிக்கூட்டுத் தெரு, வனசங்கரி அம்மன் கோவில் தெரு, தெற்கு முனியசாமி கோவில் தெரு, லோக்கல் பண்டு தெற்கு வரிசை வீதி, ஹவுசிங் போர்டு குறுக்குத் தெரு, அல்லிக்கண்மாய் மயான சாலை, இந்திரா நகர் குறுக்குத் தெரு மற்றும் மகர் நோன்பு பொட்டல் 8–வது தெரு ஆகியவற்றிற்கு தார் சாலை அமைக்கும் பணி மற்றும் பவுண்டு கடைத் தெரு மற்றும் செல்லப் பெருமாள் தெருவில் பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம் சென்னை–600 005 அவர்களது செயல்முறை கடித எண்:17349/2019/இ3, நாள்:16.10.2019–ன்படி ரூ.200.00 லட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியளிக்கப்பட்டதினை தொடர்ந்து, முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களது செயல்முறைகள் ந.க.எண்:25039–9/2019/DO2, நாள்: 18.10.2019–ன்படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டது.

இப்பணிக்கான சிப்பம்–1–க்குரிய ஒப்பந்தப்புள்ளி இரு உறைமுறையில் (Two Cover System) 12.11.2019–ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் இப்பணியை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியை நிர்ணயம் செய்ய தொழில்நுட்ப கூராய்வு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி குழுவால் (Tender Committee) கூராய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும், தொழில் நுட்ப நிபந்தனைகளை (Technical Cretia) நிறைவு செய்துள்ளதால் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியாக முடிவு செய்து அதற்குரிய (Price Bid) யினை 18.11.2019 அன்று திறக்க ஒப்பந்ததாரர்க்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு (ரூ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) | விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | M/s.Venkateswara Construction,<br>97/1, Yadava Street,<br>Ramanathapuram. | 2,00,00,000/– | 2,07,10,554/– | 4.98% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |
| 2 | திரு.எம்.கே.திருமுருகன்.<br>ஒப்பந்ததாரர்.<br>34, வடக்கு புதுத் தெரு.<br>இராமநாதபுரம். | 2,00,00,000/– | 2,16,91,327/– | 9.99% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

அதன் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் விலைப்பட்டியல் ஒப்பு நோக்கியதில் கீழ்க்கண்டவாறு விலை விகிதங்கள் வழங்கியுள்ளார்கள்.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் வழங்கியுள்ளார்கள். அவற்றில் கூடுதலில் குறைவான (4.98% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம்) விலைவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் “M/s.Venkateswara Construction, No-97/1, Yadava Street, Ramanathapuram அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பரிசீலனைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>–1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) பகுதி–2, பிரிவு–2:7:2–ல் பணியில் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டை விட 5% சதவிகிதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம் என உள்ளது. எனவே ஒப்பந்ததார“M/s.Venkateswara Construction, No-97/1, Yadava Street, Ramanathapuram அவர்கள் அளித்துள்ள 4.98% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதை மன்றம் பரிசீலத்து அனுமதிக்கலாம்.

3)மதிப்பீட்டு தொகையை விட ஒப்பந்ததாரர் கோரியுள்ள கூடுதல் ஒப்பந்த தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

4) நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்: 2566 /2019/இ1

**தீர்மானம் எண்.1062**– அலுவலகக் குறிப்புகள் அனுமதிக்கப்பட்டன.

**பொருள் 22**

இராமநாதபுரம் நகராட்சி, Turip 2019–20ன் கீழ், சிப்பம்–2–க்கான ‘‘புளிக்கார மாரியம்மன் கோவில் தெரு, திரௌபதியம்மன் கோவில் தெரு, செம்மார் தெரு, கீரைக்கார ஊரணி கிழக்குத் தெரு, கண்ணகி தெரு, நாகநாதபுரம் புதுத் தெரு, நாகநாதபுரம் குறுக்குத் தெரு, பைசல் நகர் தெரு, பானுமதி நாச்சியார் தெரு, லெட்சுமிபுரம் மேற்கு தெரு, அண்ணா நகர் குட்செட் தெரு, மதுரை வீராச்சாமித் தெரு மற்றும் சின்னச்சாமி தெரு ஆகியவற்றிற்கு தார் சாலை அமைக்கும் பணிக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம் சென்னை–600 005 அவர்களது செயல்முறை கடித எண்:17349/2019/இ3, நாள்:16.10.2019–ன்படி ரூ.200.00 லட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியளிக்கப்பட்டதினை தொடர்ந்து, முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களது செயல்முறைகள் ந.க.எண்:25039–9/2019/DO2, நாள்: 18.10.2019–ன்படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டது.

இப்பணிக்கான சிப்பம்–2–க்குரிய ஒப்பந்தப்புள்ளி இரு உறைமுறையில் (Two Cover System) 12.11.2019–ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் இப்பணியை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியை நிர்ணயம் செய்ய தொழில்நுட்ப கூராய்வு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி குழுவால் (Tender Committee) கூராய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும், தொழில் நுட்ப நிபந்தனைகளை (Technical Cretia) நிறைவு செய்துள்ளதால் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியாக முடிவு செய்து அதற்குரிய (Price Bid) யினை 18.11.2019 அன்று திறக்க ஒப்பந்ததாரர்க்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் விலைப்பட்டியல் ஒப்பு நோக்கியதில் கீழ்க்கண்டவாறு விலை விகிதங்கள் வழங்கியுள்ளார்கள்.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு (ரூ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) | விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | திரு.எம்.கே.திருமுருகன். ஒப்பந்ததாரர். 34, வடக்கு புதுத் தெரு. இராமநாதபுரம். | 2,00,00,000/– | 2,08,13,948/– | 4.98% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |
| 2 | M/s.Venkateswara Construction, 97/1, Yadava Street, Ramanathapuram. | 2,00,00,000/– | 2,17,99,656/– | 9.99% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் வழங்கியுள்ளார்கள். அவற்றில் கூடுதலில் குறைவான (4.98% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம்) விலைவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் ‘‘திரு.எம்.கே.திருமுருகன், 34, வடக்கு புதுத் தெரு. இராமநாதபுரம் அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பரிசீலனைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–1)** மன்றம் அனுமதிக்கலாம்.

2)தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) பகுதி–2, பிரிவு–2:7:2–ல் பணியில் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டை விட 5% சதவிகிதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம் என உள்ளது. எனவே ஒப்பந்ததாரர் ‘‘திரு.எம்.கே.திருமுருகன், 34, வடக்கு புதுத் தெரு. இராமநாதபுரம் அவர்கள் அளித்துள்ள 4.98% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதை மன்றம் பரிசீலத்து அனுமதிக்கலாம்.

3)மதிப்பீட்டு தொகையை விட ஒப்பந்ததாரர் கோரியுள்ள கூடுதல் ஒப்பந்த தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

4) நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்: 2566 /2019/இ1

**தீர்மானம் எண்.1063**– அலுவலகக் குறிப்புகள் அனுமதிக்கப்பட்டன.

**பொருள் 23**

இராமநாதபுரம் நகராட்சி, Turip 2019–20ன் கீழ், சிப்பம்–3–க்கான ‘‘பாலசுப்பிரமணிய சுவாமி கோவில் வடக்குத் தெரு, கூரிச்சாத்த அய்யனார் கோவில் 1–வது மற்றும் 2–வது குறுக்குத் தெரு, சேதுபதி நகர் குறுக்குத் தெரு, அண்ணா நகர் குறுக்குத் தெரு, தையல் பாகம் பிள்ளைத் தெரு, மற்றும் காந்தாரியம்மன் கோவில் குறுக்குத் தெரு ஆகியவற்றிற்கு தார் சாலை அமைக்கும் பணிக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம் சென்னை–600 005

அவர்களது செயல்முறை கடித எண்:17349/2019/இ3, நாள்:16.10.2019–ன்படி ரூ.100.00 லட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியளிக்கப்பட்டதினை தொடர்ந்து, முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களது செயல்முறைகள் ந.க.எண்:25039–9/2019/DO2, நாள்: 18.10.2019–ன்படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டது.

இப்பணிக்கான சிப்பம்–3–க்குரிய ஒப்பந்தப்புள்ளி இரு உறைமுறையில் (Two Cover System) 12.11.2019–ல் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் இப்பணியை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியை நிர்ணயம் செய்ய தொழில்நுட்ப கூராய்வு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி குழுவால் (Tender Committee) கூராய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும், தொழில் நுட்ப நிபந்தனைகளை (Technical Cretia) நிறைவு செய்துள்ளதால் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளியாக முடிவு செய்து அதற்குரிய (Price Bid) யினை 18.11.2019 அன்று திறக்க ஒப்பந்ததாரர்க்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் விலைப்பட்டியல் ஒப்பு நோக்கியதில் கீழ்க்கண்டவாறு விலை விகிதங்கள் வழங்கியுள்ளார்கள்.

| வ.எண். | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர் | மதிப்பீடு (ரூ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) | விலை விகிதம் கூடுதல்/குறைவு (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | திரு.என்.ஜீவானந்தம், ஒப்பந்ததாரர், 18–A மறவர் தெரு, இராமநாதபுரம். | 1,00,00,000/– | 1,04,76,209/– | 4.98% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |
| 2 | M/s.Venkateswara Construction, 97/1, Yadava Street, Ramanathapuram. | 1,00,00,000/– | 1,09,67,590/– | 9.99% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் வழங்கியுள்ளார்கள். அவற்றில் கூடுதலில் குறைவான (4.98% சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம்) விலைவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் ‘‘திரு.என்.ஜீவானந்தம், 18–A மறவர் தெரு, இராமநாதபுரம் அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பரிசீலனைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)**தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) பகுதி–2, பிரிவு–2:7:2–ல் பணியில் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call)

மதிப்பீட்டை விட 5% சதவிகிதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம் என உள்ளது. எனவே ஒப்பந்ததாரர் "திரு.என்.ஜீவானந்தம், 18–A மறவர் தெரு, இராமநாதபுரம் அவர்கள் அளித்துள்ள 4.98% சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதை மன்றம் பரிசீலத்து அனுமதிக்கலாம்.

3)மதிப்பீட்டு தொகையை விட ஒப்பந்ததாரர் கோரியுள்ள கூடுதல் ஒப்பந்த தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

4) நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்திரவு வழங்குவதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண்: 2566 /2019/இ1

**தீர்மானம் எண்.1064**– அலுவலகக் குறிப்புகள் அனுமதிக்கப்பட்டன.

**பொருள் 24**

இராமநாதபுரம் நகராட்சி, லேத்தம்ஸ் பங்களா ரோட்டில் உள்ள கட்டண கழிப்பறை 01.06.2019 முதல் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது கட்டிடத்தில் உள்ள தார்சு மிகவும் பழுதடைந்து இடியும் தன்மையில் உள்ளதால், பொறியாளர்களின் அறிக்கையினை ஏற்று மேற்படி கழிப்பறையினை அகற்றி சுத்தம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**–மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3906/2019/இ1

**தீர்மானம் எண்.1065**– அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் மற்றும்
ஆணையாளர்
இராமநாதபுரம் நகராட்சி